இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 05-01-2025



# ஜி.யு.போப் - நேசமணி - காமராசர்

“திருவள்ளுவர் சிலைக்கு மூன்று படகுகள் விடப்படும்” என்று அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், அந்த மூன்று படகுகளும் யார் யார் பெயரில் அமைந்திருக்கும் என்பதையும் அறிவித்துள்ளார்கள். ஐரோப்பியத் தமிழறிஞர் ஜி.யு.போப், தென் தமிழகப் போராட்ட வீரர் மார்ஷல் நேசமணி, பெருந்தலைவர் காமராசர் ஆகிய மூவர் பெயரைச் சூட்டி உள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**தமிழுக்குத் தொண்டாற்றிய ஜி.யு.போப் அவர்கள் பெயரும் - தமிழின ஒற்றுமைக்குப் பாடுபட்ட மார்ஷல் நேசமணி பெயரும் - தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட பெருந்தலைவர் காமராசர் பெயரும் சூட்டப்பட்டுள்ளதன் மூலமாக இம்மூன்றையும் முக்கியமானதாகக் கருதும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்துள்ளது.**

**இம்மூவர் தொண்டும் போற்றத்தக்கது. பாராட்டத்தக்கது. தலைவணங்கத் தக்கது.**

தமிழ் நிலத்தில் அச்சுப் பயன்பாடு உருவான காலத்தில் வலம் வந்த ஐரோப்பிய அறிஞர்கள் பலரும் தமிழ் மொழியில் தங்களது புலமையை வளர்த்துக் கொண்டு தமிழுக்குத் தொண்டாற்றத் தொடங்கினார்கள். சமயப் பணிக்காக இம்மண்ணுக்கு வந்தவர்களாக இருந்தாலும் அவர்களைத் தமிழ் வென்றெடுத்தது. அதில் அண்ட்ரிக், நொபிலி, வீரமாமுனிவர், சீகன்பால்கு, ஜி.யு.போப், கால்டுவெல், மெக்கன்சி, எல்லீஸ் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அதிலும் குறிப்பாக ஜி.யு.போப், தமிழ் இலக்கியத்துக்கும் இலக்கணத்துக்கும் அருந்தொண்டாற்றினார். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் இவர். 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கணத்தை மாணவர்களுக்குக் கற்பித்தவர்களில் முக்கியமானவர் போப். இலக்கணத்தை கேள்வி - பதில் பாணியில் அறிமுகம் செய்தவர் அவர். 1859 ஆம் ஆண்டு முக்கியமான அறநெறிப் பாடல்களைத் தொகுத்து ‘செய்யுட் கலம்பகம்’ தயாரித்துத் தந்தார். சென்னையிலும், நெல்லையிலும் தஞ்சையிலும் சமயப் பரப்புரை செய்ய வந்த அவர், முதலில் முறையாகத் தமிழ் கற்றுக் கொண்டார். உதகை பள்ளியில் ஆசிரியராகவும் தலைமையாசிரியராகவும் இருந்தார். பின்னர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ், தெலுங்கு ஆசிரியராகவும் இருந்தார். அவரது தமிழ்ப் பணிக்காக 1906 ஆம் ஆண்டு ஆசியச் சங்கம், தங்கப் பதக்கம் வழங்கியது. தனது கல்லறையில் ‘தமிழ்த் தொண்டன்’ என்று எழுதச் சொன்னவர் போப்.

‘குமரித் தந்தை’ என்றும், மார்ஷல் என்றும் போற்றப்படுபவர் நேசமணி அவர்கள். கேரளாவின் ஆளுகைக்குள் இருந்த தமிழர் பகுதியான தென் திருவிதாங்கூரை தமிழ்நாட்டுடன் இணைக்கப் போராடிய போராட்டத்துக்குச் சொந்தக்காரர் நேசமணி அவர்கள். 1948 - 1955 ஆகிய காலக் கட்டத்தில் அவர் வெளியிட்ட நான்கு புத்தகங்கள் புரட்சியை உருவாக்கின. Inside Travancore Tamilnad 1948, தென்குமரி எல்லை மாநாடு வரவேற்புரை -1950, Rule of steel and Fire in Travancore - 1954, Debates of parliament - 1955 ஆகியவை அந்த நூல்கள்.

தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு, நெய்யாற்றின்கரை ஆகிய பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்கும் போராட்டம்தான் தென் எல்லைப் போராட்டம். இப்போது படித்தாலும் இரத்தத்தைச் சூடாக்கும் ஆவணங்கள் அவை. ‘தோக்கும் வாளும் கோலோச்சும் திருவிதாங்கூர்’ என்ற இவரது நூலை திருவிதாங்கூரில் எந்த அச்சகமும் அச்சிட்டுத் தரவில்லை. நேசமணி அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததால் அந்தத் தொடர்பை வைத்து டெல்லியில் அச்சிட்டுக் கொண்டு வந்தார். டெல்லியில் அச்சிடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத்தரப்பட்ட இரண்டுமணி நேரத்தில் திருவனந்தபுரத்தில் தடை செய்யப்பட்டது. இத்தகைய தென்குமரியின் தந்தையாக வலம் வந்த மார்ஷல் நேசமணி அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அடிக்கல் நாட்டியவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். இன்று அவர் பெயரால் படகுப் போக்குவரத்தைத் தொடங்கி இருக்கிறார் இன்றைய முதலமைச்சர்.

**தேசிய இயக்கத்தின் தலைவராக வளர்ந்து வாழ்ந்தாலும் பெருந்தலைவர் காமராசரை ‘பச்சைத் தமிழர்’ என்று போற்றியவர் தந்தை பெரியார் அவர்கள். முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள காமராசர் அவர்கள் தயங்கியபோது அவரை தயங்காமல் ஏற்றுக் கொள்ள வைத்தவர்கள் தந்தை பெரியாரும், சேலம் வரதராஜுலுவும்.**

‘உங்கள் ஆட்சிக்கு காப்பாளனாக நான் இருப்பேன்’ என்றவர் பெரியார். குலக்கல்வி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, இனக்கல்வி ஆட்சியைத் தொடங்கி வைத்தவர் காமராசர். அவர் உருவாக்கிய பள்ளிகளும், மதிய உணவுத் திட்டமும் தமிழ்நாட்டுக்குள் கல்வி மறுமலர்ச்சியை உருவாக்கின.

‘குழந்தைகளைப் படிக்க வை என்றால், ‘அவன் அப்பன் படித்தானா?’ என்று கேட்கிறார்கள். அப்பனையும் பாட்டனையும் போல இவனும் அப்படியே இருக்க வேண்டுமானால் அரசாங்கம் எதற்கு? மந்திரிகள் எதற்கு?’ என்று கேட்டவர் அவர். ‘சுதந்திரம் வாங்கி பதினேழு ஆண்டுகள் ஆகிவிட்டது. ஏழை ஏழையாகவே இருக்கிறான், பணக்காரன் மேலும் பணக்காரனாகி வருகிறான். இதற்குத்தானா சுதந்திரம் வாங்கினோம்?’ என்று கேட்டவர் அவர். ‘கல்வியைப் பரப்ப வேண்டாம் என்றால் நான் முதலமைச்சர் பதவியை விட்டு விலகத் தயார்’ என்று அறிவித்தவர் அவர்.

காங்கிரஸை தி.மு.க. கடுமையாக எதிர்த்து வந்த அந்தக் காலத்திலேயே - குடியாத்தம் இடைத் தேர்தலில் பெருந்தலைவர் காமராசர் போட்டியிட்ட போது அவரை ஆதரித்தவர் பேரறிஞர் அண்ணா. எதிர்த்து வேட்பாளரை நிறுத்தவில்லை கழகம். பெருந்தலைவர் மறைந்தபோது, கொட்டும் மழையில் ஒரு மகனைப் போல இறுதிச் சடங்கு ஏற்பாடுகளைச் செய்தவர் தலைவர் கலைஞர். பெருந்தலைவர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்ததும் கழக ஆட்சியே. இன்று அவர் பெயரால் படகுப் போக்குவரத்தும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**போற்ற வேண்டியவரைப் போற்றுவதன் மூலமாக போற்றத்தக்க அரசாகச் செயல்பட்டு வருகிறது திராவிட முன்னேற்றக் கழக அரசு.**

●●

## ஆங்கிலப் புத்தாண்டையொட்டி - தலைமைச் செயலகத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - அரசுப் பணியாளர்கள் சங்கத்தினர் வாழ்த்துப் பெற்றனர்!

**சென்னை, ஜன. 5- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (3.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், ஓட்டுநர்கள் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.**

முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்ற சங்க நிர்வாகிகளின் விவரங்கள் வருமாறு:-

தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கத்தின் தலைவர் கு. வெங்கடேசன், செயலாளர் சு.ஹரி சங்கர், இணைச் செயலாளர் (பொது) இரா.லெனின், இணைச் செயலாளர் அ.ஜீவன், பொருளாளர் திருமதி சே.பிரபா;

தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கத்தின் தலைவர் வே.ஐயப்பன், துணைத் தலைவர் கு. சரவணபெருமாள், செயலாளர் தூ.தேவேந்திரன், பொருளாளர் சி.சுரேஷ் குமார், தணிக்கையாளர் திருமதி கலைச்செல்வி;

தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பெ.முனியப்பன், அகில இந்தியத் தலைவர் கே.கணேசன்;

தமிழ்நாடு அனைத்துத் துறை பிரிவு ஓய்வூதியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.கணேசன், மாநில துணைத் தலைவர் து.முருகன், மாநில பொருளாளர் ஆர். வெங்கடேசன்;

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி நிர்வாகிகள் கே. சாந்தகுமார், திருமதி ஜே. மணிமேகலை, எம்.வி. ஜெயபிரகாஷ்;

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் அமிர்தகுமார், பொதுச் செயலாளர் டி.விக்டர் பால்ராஜ், துணைத் தலைவர் ஆர்.சி.எஸ். குமார், துணைத் தலைவர் திருமதி திரவியத்தம்மாள், மாநில செயலாளர் ஈ. ஜெயபால்;

தமிழ்நாடு அரசுத் துறை ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ப.பச்சையப்பன், பொதுச் செயலாளர் மு.தனபாலன், துணைத் தலைவர் க.விஜயன், மாநிலத் தணிக்கையாளர் ஏ.லட்சுமணன்;

தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் எஸ். கணேசன், எஸ்.அப்சர் அலி, வேலு மற்றும் டி.உலகநாதன்;

தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் முனைவர் எஸ். பீட்டர் அந்தோணிசாமி, செயலாளர் ஏ.இளங்கோ, பொருளாளர் எஸ்.சங்கர்;

தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலக உதவியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் எஸ்.ஜெயகுமார், ஆர்.கர்ணன் மற்றும் கே.குமார்;

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் நிர்வாகிகள் கு. தியாகராஜன், ப.உதயகுமார் மற்றும் ஏழுமலை;

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் சா.சங்கர், துணைத் தலைவர் ஆ. முத்துகுமார்;

தமிழ்நாடு அரசு அலுவலர் சங்கத்தின் தலைவர் ஏ.துரைபாண்டி, பொதுச் செயலாளர் டி.அசோக்குமார் மற்றும் நிர்வாகிகள் மகேந்திரகுமார், ஜெயராமன், பிரபு, முத்துசாமி ஆகியோர் முதலமைச்சர் அவர்களை ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட

# விவசாயிகளிடமிருந்து கரும்பு நேரடி கொள்முதல்!

### விவசாயப் பெருமக்கள் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பயன்பெற்றிட தமிழ்நாடு அரசு அறிவுறுத்தல்!

சென்னை, ஜன.5- விவசாயிகளிடமிருந்து நேரடியாக கரும்பு கொள்முதல் செய்யப்படுகிறது. இணைய தளம் வாயிலாகவோ அல்லது சம்மந்தப்பட்ட இணைப்பதிவாளர்களையோ தொடர்பு கொண்டு கரும்பு விவசாயிகள் பயன் பெறலாம்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு :-

முதலமைச்சர் அவர்கள் 2025-ஆம் ஆண்டில் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைச் சிறப்பாகக் கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சக்கரை மற்றும் முழுக் கரும்பு வழங்கிட உத்தரவிட்டார்கள்.

அதன்படி, பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. மேலும், நேற்று முன்தினம் (03.01.205) முதல் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கான டோக்கன் விநியோகம் செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.

பொங்கல் பரிசுத் தொகுப்பில் வழங்குவதற்காக கரும்பு கொள்முதல் செய்ய மாவட்ட அளவில் (சென்னை தவிர) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தலைவராக கொண்டு வேளாண்மைத் துறை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்களின் மண்டல இணைப்பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மண்டல மேலாளர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்டும், சென்னை மாவட்டத்தில் சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் அவர்களை தலைவராக கொண்டு உணவு பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் அவர்களை உறுப்பினராகக் கொண்டும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்களில் கரும்பு கொள்முதல் செய்வதற்காக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை தவிர) வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மேலாண்மை இயக்குநர் / கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் ஆகியோர் உறுப்பினராக கொண்ட வட்டார அளவிலான கரும்பு கொள்முதல் குழு மற்றும் சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் அவர்களால் உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையர், வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் நிலையில் ஒரு அலுவலர், கூட்டுறவு சார்பதிவாளர் நிலையில் ஒரு அலுவலர் ஆகியோர் கொண்ட கரும்பு கொள்முதல் குழு மூலம் அந்தந்த வட்டாரங்களில் கரும்பு கொள்முதல் நடைபெற்று வருகிறது.

கரும்பு கொள்முதல், அந்தந்த மாவட்ட விவசாயிகளிடமிருந்து நேரடியாக வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அந்தந்த மாவட்ட விவசயிகளுக்கு கரும்பு கொள்முதலில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது, மேலும், இக்குழுக்கள் மூலம் எக்காரணம் கொண்டும் இடைத்தரகர்களிடமிருந்தோ, வியாபாரிகளிடமிருந்தோ, பிற மாநிலங்களிலிருந்தோ கரும்பு கொள்முதல் செய்யப்படுவதில்லை என்பதை உறுதி செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் விலை மின்னனு பரிவர்த்தனை மூலம் நேரடியாக வங்கிக்கணக்கில் செலுத்தப்படுகிறது.

விவசாயிகள் https://rcs.tn.gov.in/rcsweb/sugarcane-form என்ற இணையதள முகவரி வாயிலாகவோ அல்லது மாவட்ட வாரியாக கீழ்க்கண்ட இணைப்பதிவாளர்களை நேரடியாக தொடர்பு கொண்டு கரும்பு கொள்முதல் படிவத்தில் உரிய பதிவுகளை மேற்கொண்டு தங்கள் விளைவித்த கரும்பினை விற்பனை செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இடைத்தரகர்களோ, வியாபாரிகளோ விவசாயிகளை அணுகினாலோ, தவறான தகவல்களைப் பரப்பினாலோ கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரியலூர் - எம்.தீபா சங்கரி 73387 20200
செங்கல்பட்டு - வி. நந்தக்குமார்- 91760 01544
சென்னை - ஆர்.இந்துமதி (கூடுதல் பதிவாளர்) - 73388 50012
கோயம்புத்தூர் - எ.அழகிரி- 73387 20301
கடலூர் - கே.சி. இரவிச்சந்திரன் - 73387 20401
தர்மபுரி - கே.டி.சரவணன்- 73387 20501
திண்டுக்கல் - எஸ்.குருமூர்த்தி- 73387 20601
ஈரோடு - கே.ராஜ்குமார் - 73387 20701
கள்ளக்குறிச்சி - எஸ்.பி.முருகேசன் - 91760 01549
காஞ்சிபுரம் - பி.ஜெயஸ்ரீ - 73397 20801
கன்னியாக்குமரி - சி.எல்.சிவகாமி - 73387 20901
கரூர் - பி.கந்தராஜா - 73387 21001
கிருஷ்ணகிரி - ஜி.நடராஜன் - 73387 20525
மதுரை - சு.சத்தீஷ் குமார் - 73387 21100
மயிலாடுதுறை - எ.தயாள விநாயகன்
அமுல்ராஜ் - 91760 01546
நாகப்பட்டினம் - எ.தயாள விநாயகன்
அமுல்ராஜ் - 73387 21201
நாமக்கல் - ஜி.பி.அருளரசு - 73387 21300
நீலகிரி - ஆர்.தயாளன் - 73387 21400
பெரம்பலூர் - எம்.தீபா சங்கரி - 73387 20216
புதுக்கோட்டை - எ.ஜீவா - 73387 21500
இராமநாதபுரம் - ஜி.ஜினு - 73387 21600
இராணிப்பேட்டை - ஜெ.மலர்விழி - 96553 46969
சேலம் - கே.ராஜ்குமார் - 73387 21700
சிவகங்கை - ஜி.ராஜேந்திர பிரசாத் - 73387 21801
தென்காசி - ஜி.நரசிம்மன் - 91760 01541
தஞ்சாவூர் - எஸ்.தமிழ்நங்கை - 73387 21900
தேனி - டி.ஆரோக்கிய சுகுமார் - 73387 22001
திருநெல்வேலி - பி.எம்.முருகேசன் - 73387 22100
திருவாரூர் - கே.சித்ரா - 73387 49200
திருப்பத்தூர் - எ.பாலகிருஷ்ணன் - 73387 49701
திருப்பூர் - டி.பிரபு - 73387 20334
திருவள்ளூர் - டி.சண்முகவள்ளி - 73387 49100
திருச்சி - டி. ஜெயராமன் - 73387 49300
தூத்துக்குடி - ஆர்.ராஜேஷ் - 73387 49400
திருவண்ணாமலை - எஸ்.பார்த்திபன் - 73387 49500
வேலூர் - எஸ்.திருகுண ஐயப்பதுரை - 73387 49600
விழுப்புரம் - விஜயசக்தி - 73387 49700
விருதுநகர் - பி.செந்தில்குமார் - 73387 49800
இப - பொவிதி - 1 - எம்.ஹேமா - 73387 20116
இப - பொவிதி - 2 - எஸ்.லட்சுமி - 73387 20117

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இல.பத்மநாபன் - எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலை

# ரூ. 5.90 கோடி மதிப்பீட்டில் தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டும் பணி!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் - துவக்கி வைத்தனர்!

*திருப்பூர், ஜன.5- திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ரூ 5.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்!*

*தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.12.2024 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து காணொளிகாட்சி வாயிலாக தாராபுரம் ஒன்றியம், நாஞ்சியம்பாளையம் ஊராட்சி, தாராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையம் எதிரில் தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ஒதுக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ 5.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிவைத்தார்கள். அதனைத் தொடர்ந்து 02.01.2025 வியாழக்கிழமை அன்று தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் புதிய கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தனர்.*

*தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 17,020 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இரண்டு தளங்களை கொண்ட இக்கட்டடம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் அறை, ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, ஒன்றியக்குழு கூட்ட அரங்கு, அலுவலக அரங்கு, தணிக்க அலுவலர் அறை, கணிணி அறை, பதிவேடுகள் அறை, இருப்பறை, கழிப்பறை வளாகமும், வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, பொறியியல் பிரிவு, பயிற்சிக் கூட்டரங்கு, அலுவலக அரங்கு, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறை, கணினி அறை, கழிப்பறை வளாகம் ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரபாவதி பெரியசாமி, கே.எஸ்.தனசேகர், எஸ்.முருகானந்தம், கு.பாப்புக்கண்ணன், மாவட்ட மகளிர் அணி சரஸ்வதி ராஜேந்திரன், க. செல்வராஜ், கருணாகரன், சிவக்குமார், சன் பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.*



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (03.01.2025), உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில், தமிழ்நாடு சட்டப்பேரவையில் உயர்கல்வித் துறையின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தமிழ்நாடு ஆவணக்காப்பக அரசு முதன்மைச் செயலர் / ஆணையர் டாக்டர் சீ. ஸ்வர்ணா, தொழில் நுட்பக் கல்வி ஆணையர் த. ஆபிரகாம், உயர்கல்வித் துறை இணை செயலாளர் துரை. ரவிச்சந்திரன் மற்றும் உயர்கல்வித் துறை உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.